மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
வத்திராயிருப்பு

**அசல் வழக்கு எண். 9/2024**

பி.வா.சா. 1 சங்கரசுப்பு, S/o. மலையாண்டி

நாள்: 08.06.2026

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்.

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

**1)** நான் என்ன படித்துள்ளேன் என்றால் BA படித்துள்ளேன். நான் தற்பொழுது எங்கே வசித்து வருகிறேன் என்றால் சென்னையில் வசித்து வருகிறேன். எனக்கு சொந்த ஊர் எது என்றால் வலையப்பட்டி ஆகும். நான் என்ன வேலை பார்த்து வந்தேன் என்றால் லஞ்ச ஒழிப்புத் துறையில் துணைச் செயலாளராக பணிபுரிந்து தற்பொழுது ஓய்வில் இருந்து வருகிறேன். வழக்கில் காண்பிக்கப்பட்டுள்ள சொத்து எந்த கிராமத்தில் இருந்து வருகிறது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் குன்னூர் கிராமத்தில் இருந்து வருகிறது. வழக்கு சொத்துக்கான சர்வே எண் எனக்கு தெரியுமா என்றால் 960/4B ஆகும். சொத்துக்கான மொத்த விஸ்திரணம் என்ன என்றால் 24 சென்ட் நிலம் ஆகும்.

2) மேற்படி சொத்துக்கான நான்கு பக்க எல்கை விபரங்கள் எனக்கு தெரியுமா என்றால் வடக்கு பக்கம் ஆறுமுகம் என்பவருக்கு சொந்தமான நிலமும், மேற்கு பக்கம் கிருஷ்ணன் என்பவருக்கு சொந்தமான நிலமும், கிழக்கு பக்கம் பாண்டியன் என்பவரின் நிலமும், தெற்கு பக்கம் யார் இருக்கிறார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலம் யார் சொல்லி தயார் செய்யப்பட்டது

என்றால் நாங்கள் சொல்லி தயார் செய்யப்பட்டு என்னுடைய வழக்கறிஞர் படித்துக் காண்பித்து நான் தெரிந்து கொண்டேன்.

**வாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஒப்பம்.ராமநாதன்.
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு